

# நத்தார் பண்டிகை

உலகில் உள்ள மனிதர்களது பாவங்களைப் போக்கவும் அவர்களை ரட்சிக்கவும் அமைதி நிலவவும் இறை மகனாகிய இயேசு கிறிஸ்து இப்பூமியில் அவதரித்தார் என்று கிறிஸ்தவ மக்கள் நம்புகின்றார்கள். இந்தப் பண்டிகை டிசம்பர் மாதம் இருபத்து ஐந்தாம் திகதி கொண்டாடப்படுகிறது.

இயேசு பாலன் பெத்லகேம் எனும் நகரில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். இவரது தாயார் கன்னி மரியாள் ஆவார். இயேசு பாலன் பிறந்ததற்கு அடையாளமாக வானில் விண்மீன் ஒன்று தோன்றியது.

அன்று கிறிஸ்தவர்கள், இயேசு பாலனின் பிறப்பை நினைவுகூரும் வகையில் மாட்டுத் தொழுவக் காட்சிகளையும் கிறிஸ்மஸ் மரங்களையும் தேவாலயங்களிலும், பொது இடங்களிலும், வீடுகளிலும் வைப்பார்கள். அவற்றை அழகாக அலங்கரிப்பார்கள். அன்று தேவாலயங்களில் இரவு முழுவதும் செபக்கூட்டங்கள் இடம்பெறும். பிரார்த்தனைகள் நடைபெறும். டிசம்பர் 24 ஆம் திகதி நள்ளிரவு, கிறிஸ்தவர்கள் தேவாலயங்களுக்குச் சென்று வழிபடுவார்கள்.

நத்தார் பண்டிகை அன்று வசதிபடைத்தோர் ஏழை, எளியவர்களுக்கு உதவிகள் செய்வார்கள், கரோல் கீதங்கள் பாடுவார்கள், பலரும் நத்தார் தாத்தா வேடம் பூண்டு எல்லோருக்கும் பரிசுகள் வழங்குவார்கள். குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஒன்று கூடி மகிழ்வார்கள்.

இயேசு கிறிஸ்து தமது கூற்றில் அயலவரை நேசிக்கும் படி உலகவாழ் மக்களுக்கு போதித்துள்ளார்.

## அரும்பதங்கள்
## වදන් පෙළ

| | | |
|---|---|---|
| *1.* பண்டிகை | - | උත්සවය |
| *2.* பூமி | - | පොළොව |
| *3.* ரட்சிக்கவும் *(ரட்சி)* | - | මුදවා ගැනීමටත් |
| *4.* போக்கவும் *(போக்கு)* | - | නැති කිරීමටත් |
| *5.* அவதரித்தார் *(அவதரி)* | - | පහළ වුණේය |
| *6.* நம்புகின்றார்கள் *(நம்பு)* | - | විශ්වාස කරති |
| *7.* இயேசு பாலன் | - | ජේසු බිළින්ඳා |
| *8.* மாட்டுத் தொழுவம் | - | ගව ලෙන |
| *9.* அடையாளமாக *(அடையாளம்)* | - | සංකේතාත්මකව |
| *10.* விண்மீன் | - | තරුව |
| *11.* நினைவு கூரும் | - | සිහි කිරීම |
| *12.* நள்ளிரவு | - | මධ්‍යම රාත්‍රිය |
| *13.* செபக்கூட்டங்கள் | - | දේව සභා |
| *14.* இறைமகன் | - | දේව පුත් |
| *15.* தோன்றியது *(தோன்று)* | - | මතු වුණේය |
| *16.* வழிபடுவார்கள் *(வழிபடு)* | - | ආගමික කටයුතුවල නිරත වන්නෝය |
| *17.* அலங்கரிப்பார்கள் *(அலங்கரி)* | - | සරසති |
| *18.* ஏழை எளியவர்களுக்கு *(ஏழை எளியவர்)* | - | දුගී දුප්පතුන්ට |



## செயற்பாடு - 1
## ක්‍රියාකාරකම - 1

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**
**පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.**

1. இயேசு கிறிஸ்து இப்பூமியில் ஏன் அவதரித்தார்?

_______________________________________________

2. அவர் பிறந்தபோது ஏற்பட்ட அதிசயம் என்ன?

_______________________________________________

3. அவர் பிறப்பை நினைவு கூரும் வகையில் வீடுகளில் என்ன செய்வார்கள்?

_______________________________________________

4. இயேசு கிறிஸ்துவின் முக்கியமான போதனை எது?

_______________________________________________

5. நத்தார் தாத்தா வேடம் உலகிற்கு என்ன செய்தியைத் தருகிறது?

_______________________________________________



## செயற்பாடு - 2
## ක්‍රියාකාරකම - 2

**அடைப்புக்குறிக்குள் உள்ள இறந்தகால வினையெச்சங்களைக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புவோம்.**
සුදුසු පූර්ව ක්‍රියා පද වරහනෙන් තෝරා හිස්තැන් පුරවමු.

**(மலர்ந்து / வேடம் பூண்டு / மின்னி / ஒன்று கூடி / சென்று)**

1. *பலர் நத்தார் தாத்தா ______________________ மக்களுக்கு பரிசுகள் வழங்குவார்கள்.*
2. *கிறிஸ்தவர்கள் தேவாலயங்களுக்கு ______________________ வழிபடுவார்கள்.*
3. *கிறிஸ்மஸ் தினத்தன்று உறவினர்கள், நண்பர்கள் ______________________ மகிழ்வார்கள்.*
4. *மலர்கள் ______________________ எங்கும் மணம் வீசியது.*
5. *இடி முழங்கி மின்னல் ______________________ மழை பொழிந்தது.*



## செயற்பாடு - 3
## ක්‍රියාකාරකම - 3

**கீழே தரப்பட்டுள்ள நிகழ்கால வினைச்சொற்களை இறந்தகால மற்றும் எதிர்கால வினைச் சொற்களாக மாற்றுங்கள்.**
පහත සඳහන් වර්තමාන කාල ක්‍රියා පදයන් අතීත සහ අනාගත කාල ක්‍රියා පද වලට හරවා ලියන්න.

| நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் |
|---|---|---|
| பிறக்கிறார் | | |
| கொண்டாடுகிறார்கள் | | |
| தோன்றுகிறது | | |
| அவதரிக்கிறார் | | |
| ஆகிறார் | | |
| வைக்கிறார்கள் | | |
| இடம் பெறுகிறது | | |
| வழிபடுகிறார்கள் | | |
| செய்கிறார்கள் | | |
| வழங்குகிறார்கள் | | |
| மகிழ்கிறார்கள் | | |
| நேசிக்கிறார்கள் | | |



## செயற்பாடு - 4
## ක්‍රියාකාරකම - 4

**கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு ஒத்த கருத்துச் சொற்களை எழுதுவோம்.**
පහත සඳහන් පදවලට සමානාර්ථ පද ලියමු.

*1.* பிறந்தார் -

*2.* புத்திரன் -

*3.* தாயார் -

4. வையகம் -

5. நட்சத்திரம் -

6. ஆகாயம் -

7. விழா -

8. அங்கத்துவர்கள் -

9. சிநேகிதர்கள் -



**செயற்பாடு - 5**
**ක්‍රියාකාරකම - 5**

**பின்வரும் தமிழ் வாக்கியங்களைச் சிங்களத்திற்கு மொழிபெயர்ப்போம்.**
පහත සඳහන් දෙමළ වාක්‍ය සිංහලට පරිවර්තනය කරමු.

1. உலக மக்களின் பாவங்களைப் போக்க இயேசு கிறிஸ்து பிறந்தார்.

2. 'அயலவர்களையும் நேசியுங்கள்' என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார்.

3. கிறிஸ்தவர்கள் நத்தார் தினத்தன்று தேவாலயங்களுக்கு சென்று வழிபடுவார்கள்.

4. நாடு முழுவதும் கிறிஸ்மஸ் தினத்தன்று கிறிஸ்மஸ் அலங்காரங்களைக் காணலாம்.

5. நத்தார் தாத்தா அன்று உலகிற்கு ஒரு நற்செய்தியைக் கொண்டு வருகிறார்.